பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**07 06 2026** **06 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

2. அரசு மருத்துவமனைகளில், மருத்துவர்கள் பற்றாக்குறை வெகுவாக குறைந்துள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

3. திமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று தமிழக அரசை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழகத்தில் 14 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த ஐந்து தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. 23 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில், நேற்று இந்தியா இரண்டு தங்கம், மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

எல்லைப் பகுதிகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகள், சொத்துகள் விற்பனை மற்றும் நிதிசார் பரிவர்த்தனைகள் குறித்த கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

திரிபுராவில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் கடந்த 5 ஆண்டு காலத்திற்கான நில ஆவணங்களை ஆய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்றும், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

எல்லைப் பகுதிகளில் கள்ளநோட்டுப் புழக்கம் குறித்து கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் வகையில் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு உரிய பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

அரசு மருத்துவமனைகளில், மருத்துவர்கள் பற்றாக்குறை வெகுவாகக் குறைந்துள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், 99 சதவீத மருத்துவர் பணியிடங்கள் நிரப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மருத்துவமனைகளில் உள்ள செவிலியர் காலிப் பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான இடங்களை நிரப்பிக்கொள்ள மாநில அரசுகளுக்கு வழங்குவது குறித்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அரச பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை தற்போதைய 7.5 சதவீதத்திலிருந்து அதிகரிப்பது குறித்த முதலமைச்சருடன் ஆலோசனை நடத்தி முடிவெடுக்கப்படும் என்று திரு அருண்ராஜ் தெரிவித்தார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் தற்போதைய அரசியல் மாற்றங்களுக்கு முக்கிய காரணியாகத் திகழ்கிறது என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

கோவை நிலாம்பூரில் தனியாள் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழகத்தில் நல்லாட்சி அமைய வேண்டும் என்ற நோக்கில் பலர் த வெ க - வில் இணைந்து வருவது வரவேற்கத்தக்கது என்று திரு செங்கோட்டையன் கூறினார்.

<<<<>>>>

வர்த்தகக் கண்காட்சி தொழில்துறை வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மாநில குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை அமைச்சர் திரு மதன்ராஜ் தெரிவித்தார்.

தென்காசியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சங்கம் சார்பில் மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில், பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை, கோவை போன்ற பெரு நகரங்களில் நடத்தப்பட்டு வரும் இததகைய கண்காட்சிகள், தென் மாவட்டங்களில் நடத்தப்படுவதால் மூலம் சிறு தொழில்துறையினருக்கு நம்பிக்கை அளிக்கும் என்று திரு மதன் ராஜ் கூறினார்.

முன்னதாக, இந்த கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள 108 அரங்குகளைகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

<<<<>>>>

தேர்தல் சமயத்தில் அளித்த வாக்குறுதிகளை அளித்துவிட்டு, தற்போது வெள்ளை அறிக்கை வெளியிடுவோம் என்று கூறி, மக்களின் கவனத்தை திசை திருப்ப த வெ க அரசு முயற்சி செய்வதாக அ இ அ தி மு க பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் எடப்பாடியில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டி பேசிய அவர், தி மு க ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுள்ள மேட்டூர் அணை உபரிநீர் திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற அனைச்சரவைக் கூட்டத்தில், **436** திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும், அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்தும் மாநில அரசு உரிய விளக்கமளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மாநிலத்தில், சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாகவும், குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று திரு எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மாசு ஏற்படுதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக கழிவுநீர் ஆற்றில் கலப்பதை தடுப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சியர் திரு. ஆனந்த் மோகன் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Anand Mohan — 25 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில், கோவை, நீலகிரி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த ஐந்து தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

கேரளம் மற்றும் அதனையொட்டியுள்ள பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில், அடுத்த நான்கு தினங்களில் அதிகபட்ச வெப்பநிலை மூன்று டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாகக் குறையக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இன்றும் நாளையும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

லெபனானில் அண்மையில் தொடங்கப்பட்ட இரண்டாவது சர்வதேச விமான நிலையம் விரைவில் பயணிகளின் பயன்பாட்டிற்கு வரும் என்று அந்நாட்டுப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

-------------

சிங்கப்பூரில் உள்ள இந்திய வம்சாவளியினரை இழிவுபடுத்தும் வகையில் சீனாவில் இருந்து செயல்படும் 3 சமூக வலைதளங்களை அந்நாட்டு அரசு தடை செய்துள்ளது.

-------------

பலுசிஸ்தானில் சரக்கு வாகனங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று வர்த்தகர்கள், போக்குவரத்து துறையினர், தொழில் நிறுவன தலைவர்களின் கூட்டுக் குழு அந்நாட்டு அரசை வலியுறுத்தியுள்ளது.

-------------

திரிபுராவில் அம்மாநில காவல்துறை மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையினர் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

-------------

ஜந்தர் மந்தரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் செய்திகள் தவறானவை என்று தில்லி காவல்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

-------------

தேனி மாவட்டம் காமாட்சிபுரம் கிராமத்தில் இம்மாதம் 10ஆம் தேதி மக்கள் தொடர்பு முகாம் நடைபெற உள்ளதாக ஆட்சியர் திரு. வைத்திநாதன் தெரிவித்துள்ளார்.

-------------

மேற்குத்தொடர்ச்சி மலையில் பெய்த கனமழை காரணமாக முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கோவை குற்றாலம் அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

-------------

தூத்துக்குடி துறைமுகத்தில் சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் திறன் நடப்பு நிதியாண்டில் 8 புள்ளி ஒன்பது மூன்று சதவீதம் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது.

-------------

இணையவழி கட்டட திட்ட அனுமதியை விரைவில் வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு. ராகுல்நாத் தலைமையில் நேற்று நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

**23** வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில், நேற்று இந்தியா இரண்டு தங்கம், மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

மங்கோலியாவில் **Ulaanbaatar** நகரில் நேற்று நடைபெற்ற ஆடவர் **74** கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் **Sagar Jaglan** தங்கப் பதக்கம் வென்றார்.

மகளிர் **76** கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் **Kajal Dhochak** தங்கப் பதக்கம் வென்றார்.

இதே எடைப்பிரிவில் **Piriya malik**-க்கும், **55** கிலோ எடைப்பிரிவில் **Hansika Lamba**-வும், **62** கிலோ எடைப்பிரிவில், **Mansi Ajlawat**-ம் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

-----------------

உலக தடகளப் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

தைபேயில் நடைபெற்ற மகளிர் 400 மீட்டர் ஓட்டத்தில் இப்பதக்கத்தைக் கைப்பற்றி இந்தியா புதிய சாதனை படைத்துள்ளது.

-----------------

தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்திய அணி பட்டம் வென்றது.

கோவாவில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், இந்திய அணி 3-1 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷ் அணியை வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

----------------

உலக யோகாசன சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Rohan Tayde தங்கப்பதக்கம் வென்றார்.

அஹமதாபாத்தில் நடைபெற்ற ஆடவர் சப்-ஜூனியர் தனிநபர் போட்டியில், அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம் உட்பட மொத்தம் 7 பதக்கங்களை வென்றுள்ளது.

-----------------

**Ulaanbaatar-ல் நடைபெற்ற ஆசிய தனிநபர் மகளிர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற சென்னையை சேர்ந்த வீராங்கனை சவிதாஸ்ரீ பாஸ்கருக்கு முதலமைச்சர் திரு. விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

**<<<<The End>>>>`**